[1975 அக்டோபர் 30

நெட்டுக்குப்பம் மீனர் குடியிருப்பு

*143 வினா. திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கத்திவாக்கம் நகரியத்தில் நெட்டுக்குப்பம் மீனவ மக்களுக்குக் குடியிருப்புக்கென நிலம் கையகப்படுத்தும் பணி எப்பொழுது முடியும்?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: நெட்டுக்குப்பம் மீனவ மக்களுக்குக் குடியிருப்பு நிவாரணத்திற்காக நிலம் எடுப்பு செய்ய நில எடுப்பு சட்டம் பிரிவு 4 (1)ன் கீழ் உத்தேச மதிப்பீடான ரூ. 2,46,300-க்குப் பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் தற்போது இருக்கிறது. மேலும், நெட்டுக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கம் இதற்கான மக்கள் பங்குத் தொகையாக நாலில் ஒரு பங்கான ரூ. 61,600 செலுத்த வேண்டியிருக்கிறது. இந்தத் தொகை செலுத்தியவுடன் நில நடப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கொண்டு செயல்முறைகள் மேற்கொள்ளப்படும் என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, கத்திவாக்கம் நகரியத்தில் நெட்டுக்குப்பம் மீனவ மக்களுக்காக நிலத்தை கட்டாய ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீடுகள் கட்ட வசதி செய்வது என்ற முயற்சி கடந்த ஐந்தாறு ஆண்டுக்காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் 75 சதவிகிதம் அவர்களுக்கு வழங்க முன்வந்தாலும் 25 சதவிகிதத்தை அவர்கள் செலுத்தியாக வேண்டுமென்ற நிபந்தனையை அந்த மீனவ மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தும்கூட நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் ஏறக்குறைய 20 சதவிகிதத்தை அவர்களது நிலம் போய்விடக் கூடாது என்பதற்காக முன்பணமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அரசு அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் 25 சதவிகிதத்தை எப்படியும் செலுத்தித்தான் ஆக வேண்டுமென்று கேட்பதால் அந்தத் தொகையைக் கூட நிச்சயமாகக் கடனாக அளித்தால் பிறகு அதை அரசுக்குத் திருப்பி அளித்து விடுவதாக மீனவ மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக இந்தத் திட்டம்

1975 அக்டோபர் 30]

அப்படியே இருந்துகொண்டிருப்பதால் அதைத் தனியாகப் பரிசீலனை செய்து அதை விரைவாக முடித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, நெட்டுக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல அரசுக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்திருக்கிறார்கள். தற்போதுள்ள வறுமை காரணமாக 61,600 ரூபாய் செலுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லையென்றும், இந்தத் தொகையையும் அரசு மேற்கொண்டு கொடுத்துவிட்டு பிறகு இந்தச் சங்கத்தின் மூலமாகத் திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். அது நிதித் துறைக்கு அனுப்பப்பட்டு அரசாங்கம் யோசித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர், கைவினைப் பொருள் விற்பனைக்கூடம்.

*144 **வினா திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாடு கதர்-கிராம வாரியத்தால் நடத்தப்படும் 'காதி கிராப்ட்'களின் 1973–74 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ரூபாய் 440.91 இலட்சங்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ்நாடு கதர்-கிராம வாரியத்தால் நடத்தப்படும் "காதி கிராப்ட்"-ல் மொத்த விற்பனையை அதிகரிக்க அரசு மேற்கொண்டு வரும் சிறப்பான நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அரசாங்கத் துறைகளில் கதர்த் துணிகள் வாங்குவது இடைக் காலத்தில் நிறுத்தப்பட்டது. அதுமட்டுமன்றி கதர்த் துணிகளை வாங்க 'செகண்ட் அட்வான்ஸ்' வழங்குவது அரசு ஊழியர் களுக்கு நிறுத்தப்பட்டது. கதர் விற்பனை அதனால்தான்

TRUTH ALONE TRIUMPHS